உ

சிவமயம்.

சண்முகநாதன் றுணை.

திருச்சிற்றம்பலம்.

இரங்கோன்

# சிவ சுப்ரமண்யக் கடவுள்பேரில்

# காவடிச்சிந்து.

இஃது

பூவுற்றகுடி நகரம்

திரு. ஏ. திருவம்பலஞ் செட்டியாரவர்கள்

குமாரர்

## ஏகாம்பரஞ் செட்டியாரால்

இயற்றப்பட்டு

மேலச்சிவல் பட்டி

கு. ம. மூத்த. குமரப்ப செட்டியா ரவர்களால்

பார்வையிடப்பட்டு

**நகரத்தார்களால்**

ஸ்ரீ கணேஸர் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விகாரிஞு தைமீ

இதன் விலை அணு 4.

உ

சிவமயம்.

சண்முகநாதன் றுணை.

திருச்சிற்றம்பலம்.

இரங்கோன்

சிவ சுப்ரமண்யக் கடவுள்பேரில்

# காவடிச்சிந்து.

இஃது

பூவுற்றகுடி நகரம்

திரு. ஏ. திருவம்பலஞ் செட்டியாரவர்கள்

குமாரர்

ஏகாம்பரஞ் செட்டியாரால்

இயற்றப்பட்டு

மேலச்சிவல் பட்டி

கு. ம. முத்த. குமரப்ப செட்டியா ரவர்களால்

பார்வையிடப்பட்டு

நகரத்தார்களால்

ஸ்ரீ கணேஸர் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விகாரிஹு தைமீ

இதன் விலை அணா 4.

சிவமயம்.

# சாத்துகவிகள்.

இஃது
புதுக்கோட்டைச்சீமை மேலச்சிவல்பட்டி
**கு. ம. மூத்த. குமரப்பசெட்டியாரவர்களா**
லியற்றப்பட்டது.

---

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தோத்திரக் கண்ணியாகச் சொல்லினன் றரும்பார் நீப.
பூத்திரள் கண்ணிவேய்ந்த வாறிரு புயத்தோன் மீது
சாத்திர ஞான மிக்கத் தவத்தவர் மகிழவீண்டு
நாற்றிசைப்பூத்த ஏகாம்பரனென்னு நாமன்மாதோ.

அலையெரியுங் கடற்சூழ்ந்தவவனிமிசை யிந்திரனூராமாமென்ன
பலபொருளுஞ் சிறைந்தநெறங்கோண்பதிக்கணியாய்ச்சுந்தரஞ்சேர்பசுமந்தானூர்
புலமைமுசற் றிருக்குமரன் புகழ்தனைப் பலகலை தேற்புலவர் முன்னே
நலம்பெறக் கீர்த்தனமாக நவின்றனேகாம்பரநன் னுமன் மனனே.

வெண்பா.

கச்சிருக்கும் வேடக் கன்னிக்காய் கானகத்தி
லிச்சைகொண்டு சென்ற வெந்தைமேல்—நச்சிநச்சி
எச்சரிக்கைச் சொன்னனே காம்பர னென்பா
னொச்சமெவர் சொல்வா ருகந்து.

---

இஃது
திருக்கண்ணமங்கை ராமாயணப்பிரசங்கி
ம-ள-ள-ஸ்ரீ
**வீ. நாராயணசாமி தாசரவர்களா**
லியற்றப்பட்டது.

---

வெண்பா.

பல்வளஞ்சேர் ரங்கோன் பதிமுருகன் றைப்பூச
நல்வளத்தைச் சிந்தாய் நவின்றனனே— சொல்வளஞ்சேர்
நல்லா னேகாம்பரப்பேர் நாவலனு மினியதமிழ்
வல்லா னென்றேபுவியில் வாழ்த்த.

சாத்துகவிகள் முற்றிற்று.

# சிறப்புப்பாயிரம்.

இஃது

இரங்கோன் "பிரதரோதய மனு" பத்திராதிபரும்

பிரசங்கியுமாகிய ம-ள-ள-ஸ்ரீ

ம. சோ. கோவிந்தசாமி முதலியாரவர்களா

லியற்றப்பட்டது.

---

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

சீராரும் பூவுற்ற குடிநகர மெனும்பதிவாழ் செல்வனும் பூத்
தாராரு மணிமார்ப னளகநிகர்ப் பெருநிதியான் றரணிதன்னிற்
பேராரு மாதிரு யேதிருவம்பலஞ் செட்டிப் பெற்றோனை
யோராருமெழி லுடையானேகாம்பரஞ்செட்டியெனுநாமத்தான்.

சுத்தனிவனெனப்புகழுஞ் சொன்மாறு குணமுளனுஞ்சொற்சோர்வில்லாக்
கற்றவர்களுளங் களிக்குங் கல்விநிறை புலமையான் கருணையாரு
நித்தனெனுங் குமரனடி நீங்காத பக்தியுளான் நீதியாய்ந்த
புத்திதனிற் பலர்ப்புகழும் பொறையுடையா னென விவனைப் புடரலாமே.

அன்னவன்றன் னிகழ்காலத் தருமிரங் கோன்பதிக்கோ ரணி யென்றே து
முன்னரிய பொற்றிரளைக் கொளலீட்டல்வாணிபஞ்செய் துறைவான் பூவிற்
பன்னகரிற் பெருநிதியைப் படைத்த வணிகர் மகிழப் பக்ஷமோடுந்
தன்னிகரி லட்சமுடை யவனுகு மெல்லோர்க்குந் தக்கோனம்மா.

இத்தகைய குணம் வாய்ந்த யேகாம்பரஞ்செட்டி யெனு நாமத்தோன்
சொற்றகைய மாவிரங்கோன் வணிகர்வழி யாறறைமேல் வீட்டில் வாழுங்
கத்தனெனுஞ் சிவபாலன் கர்த்தனடி யனுதினமுங் கருத்தில் வைத்து
பெத்தமுடன் காவடிகட் டேக்கிவிளை யாடேபுகழ் பேச வேண்டி.

பூமதிற் சிறந்தசிவகங் கைப்பூச மெனச்செறியாற் புகன்றநகரிற்
பாசமுடன் வணிகர் சிவபாலனைச் சேரமீதிருத்திப் பசுமந்தானவிஸ்
வாசமுடன் கொணர்ந்தேகுரைவைபவத்தைச்சிறப்புடனே வகைந்து பின்னு
நேசமுடன் காவடிகட் டேந்தும் விந்தைதனைச் சிறப்பாய் செருடனேன்டி.

மன்னனி மருணகிரி முருகன்திருப்புகழ்பாடி மகத்துப்பதி
லென்னளரழியாத புகழடைந்தவாறதனை யின்றுஞ் சான்றோ
மின்னனி மேலோகம்பரஞ்செட்டி யினிபதமிழிசையுங் கூட்டிச்
சொன்னனே காவடிச்சிந்தெனும் பனுவற் பாவலர்முன் றுணிவாய்த்தானே.

எண்டிசையும் புகழ்மணக்கு மெழிலிரங்கோன் பதியதில்வா ழெந்தைமீது
பண்டிவினை போக்கிடவே பாடினன் சிந்தெனுமிப் பனுவற்றன்னைக்
கண்டவர்களுளங் களித்துக் கல்லாதார் செவிமடுத்துக் கருணையோடும்
விண்டிட்டிய காம்பரம் விந்தவ னெனப் புவியில் விளங்கத்தானே.

சாத்திரத்தாலளவுபடா சண்முகன் பூசச்சிறப்பைத் தரணிமீது
பாத்திறத்தாற் சிந்தடியாய்ப் பாடினனெனிவனே காம்பரஞ் செட்டிப்பேர்
நாத்திறத்தா னெனப்புலவர் நவின்றிடவே புகன்றகவி நனினந்தன்னை
நேத்திரத்தாற் காண்பதற்கு வெட்கியன்றோ சேடன்பார் நிதனமானான்.

இந்நலமார் சிந்திதனைப் புதுக்கோட்டை மேலச்சிவல் பட்டி வாழு
மன்னலமார் குமு. முசுச. குமரப்பசெட்டியெனு நலத்தான் மிக்கோன் (சந்த
சொன்னலமாரிலக்கியத்தேடிலக்கணச்சோர்வின் றெனவேதொன் றூலய்
பன்னலமார் பாவலரும் பார்த்துமகிழ்ந்திட விதனைப் பரிசோதித்தான்.

எத்திசையும் புகழ்மணக்கு மெழிலிரங்கோ னெனும் பேறினிய நாட்டில்
நற்றவர்கள் பணிந்தேத்துஞ் சிவசுப்ரமண்யரெனு நாதர்பாதஞ்
சித்தமதி லன்புடனே தினம்பணிந்து வருநகரத்தார்களென்னு
முத்தமர்களிடத்தேகாம் பரஞ்செட்டி யச்சிபற்ற வுரைத்தகாலே.

பண்டுவினைதனை நீக்க பாலசுப்ர மண்யரடி பக்தியோடு
தொண்டுசெய்து காவடிகட் டேக்கிவிளை யாடுதின துதிப்பின் சிந்தைக்
கண்டுமன மதிமகிழ்ந்துக் கடுகிலச் சிபற்று மென்று கருணையோடு
ழண்டுபொருளுதவிய ரங்கோன் நகரத்தார் சிறப்பை விளங்கப்போமோ.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto

https://archive.org/details/gc-sh1-1-0224



உ

சண்முகநாதன் றுணை.

# காவடிச் சிந்து,

காப்பு.

சீர்திகழும் றெங்கோன் திருநகரச் சண்முகவேள்
சீர்புகழுஞ் சிந்ததனைச் செப்பவே—சீர்திகழச்
செங்கரத்தில் மானேந்துந் தேவனருள் யானைமுகத்
தைங்கரன்பொற் ருட்டுணையே யாம்.

சிந்து.

தனன தன தனன தன தனனு-தனன-தந்த
னுனு தனு - தந்த னுதந்த னுனு.

1. மண்டலத்தில் றெங்கோன் மாநகரம் - இந்த-சுற்றி
மதிற்சூழு மாளிகையு மணிகளொடு சிகரம்
அண்டருறைகற்பக நாடாகும்-அழகில்-ஈச
னருளு முருகேச னருளெங்கு நிறைவாகும், (தன)

2. மங்கையுமை நேசனருள் பாலன்-சிவ-நெங்கோன்
மாநகரம் வாழுமுருகேசன் வடிவேலன்
பொங்கு புகழுடைய தமிழ்ப்பாட-எங்கும்-ஐந்து
பொற் கரத்தோ னடியென் முடிமீது சூட. (தன)

3. புள்ளிமயில் வாகன முத்தையன் - வன்ன-அடியார்
போற்றவினை தீர்த்தருட்செய்தாளு முருகையன்
தெள்ளுதமிழ்பாட வருட் செய்வ-னுயர்-நாளுஞ்
செய்யவிரு தாளைமறவாதடிய னுய்வன். (தன)

4. புவிமீது புலவர்கண்முன்னெந்தை - இந்த-முருகன்
பொன்னடிச் செயலாலுரைத்திடு மிச்சிந்தை
கவிவாணரான பெரியோர்கள் - அதி-குற்றங்
காணார்களாஞ் சிறுவனென்றுமறிவோர்கள். (தன)

5. சீர்புகழுமிந்நகரில்வாழும் - மிகு-நல்ல
சிறப்பதனையெடுத்துரைப்பேன்செவிகொடுத்துக்கேளும்
வாருலவு மலர்மகளுக் கெல்லை-சொர்ண-இந்த
மாநகருக் களகேச நகருநிகரில்லை. (தன)

6. தருவைநிக ரிந்நகருக்கணியாய் பஞ்ச-பணையிற்
சங்குகணிறைந்து திரையாழிதனுக் கிணையாய்
பெருகியகுளம் பலதவழ்ந்து-பொங்கி-எங்கும்
பெறலரும் வெண்முத்துகள் சொரிந்திடுமகிழ்ந்து. (தன)

7. நருமலர்ச் செடிகள் வளர்தோட்டம்-செழு-வண்டு
நாதகீதங்களொடு நாடுமொரு கூட்டம்
மருமல்லி முல்லை மலர்ந்திடுமாம்-சிவந்தி-எங்கும்
வாழை தெங்கோடு கமுகெங்கு நிறைந்திடுமாம். (தன)

8. பூங்காவனங்களொரு புறமாம்-மகிழ்-வேம்பு
புளிசூதங்கொன்றையருள் வில்வத்தின் மரமாம்
பாங்கான ஆலமரச்சோலை-பார்க்க-எங்கும்
பலாமரத் தோடரசு பரவிநிறை சாலை. (தன)

9. வளமுடைய மகிழமரச்சோலை-நல்ல-எங்கும்
வளர் புன்னையொடு வாத்திமரஞ் சூழுஞ்சாலை
அழகு செண்பக விருக்ஷ நீழும்-ஆகா-வான
மளாவியே வளர்கின்ற சோலை நனிசூழும். (தன)

10. கொஞ்சுகுயிற்பாடு மயிலாடும்-எங்கும்-அன்னங்
கூடிவிளையாட வதன் சோடுகளைத் தேடும்
பஞ்சவன்னக் கிளிகளொரு சோடாய்-அழகு-எங்கும்
பறந்துவருமாம் தெய்வபக்ஷிகளுக் கீடாய். (தன)

11. மாடப்புருவினங்க ளொன்றாய்-ஆகா-சேர்ந்து
மாளிகைகடோறும் விளையாடிவரு நன்றாய்
கூடிக்குலாவிவருங் காடை-சென்று-கிள்ளை
கொஞ்சியே பூவைவிளையாடு மணிமேடை. (தன)

12. கேட்டபடியே மழைகள் பெய்யும்-நாளுங்-மேரு
கிரியெனவுந் தானியங்கள் விளைந்துவரச் செய்யும்
நாட்டிலிதற் கீடுகிடையாது-ஆகா-எந்த
நாளுமொரு வஸ்துக ணமக்கு முடையேது. (தன)

13. வற்றியழியாத கடற்பதியாம்-நாளும்-ஐரா
வதமென வுரைக்க மன்றாடிவரு நதியாம்
சுற்று மதிற்சூழ் தடாகங்கள்-ஆகா-உலகிற்
சொல்ல நிகரில்லாத சத்திரமடங்கள். (தன)

14. பார்புகழ் சைங்கரன்பதி துலங்குந்-திவ்ய-அடியார்
பணியுங் காமாக்ஷி திருவாலய மிலங்கும்
தார்புகழ் சண்முகன் வளரும்பதியே-வேல்வேல்-நாளுந்
தவறாது சரவணபவாவென்ற துதியே. (தன)

15. ஆதிகேசவன் கோவிற்றன்னும்-ஸ்ரீமத்-காளி
அம்மைவளர் மண்டபந் தன்னிலருள் மின்னும்
வேதியர்கள் வாழ்மனை துலங்கும்-வேத-சைவர்
வேளாளர் வாழ்மனைகளெங்கினு மிலங்கும். (தன)

16. சித்ரநவரத்ன மணிக்கூடம்-ஆகா-காந்தி
ஜெகசோதியெனவீசு மேழுமணிமாடம்
முத்து வயிரக்கலசந் துன்னும்-எங்கும்-தங்க
முகடுடைய பந்தலொளி தகதகென மின்னும். (தன)

17. பத்திமாட்டங்க டிகழ்சோதி-மின்னும்-எங்கும்
பலவன்னமுடைய மனையணி திகழும்வீதி
சத்திபாலகனருட் கிடைக்கும்-பரா-சொர்ண
தானங்க டவருதெந் நாளிலும் நடக்கும். (தன)

18. எத்திசையும் புகழுடைய வீதி-வேல்வேல்-முருக
னெழுந்தருட்செய் வணிகர்மனைமுகல் றேட்டின் சோதி
முத்துமலை ரத்னமலைபோலே-நாளு-செல்வ
முகந்திருக்குங் குறைவின்றி வேலனருளாலே. (தன)

19. தனம்பொழியும் வணிகர்மனை யெல்லாம்-ஆகா-கந்த
சாமிநாதக்கடவுடன்னைவெகு நல்லாய்
தினம்பணிவர் தைபூசத்தன்று-கேளுந்-நடக்குந்
திருவிழாவின் புகழுரைக்கவே நன்று (தன)

20. இந்நகரில்வாழ் வணிகர்கூடி-ஆகா-வேல
னெழுந்தருட்செய் மேல்வீட்டிலேகினர் பாடி
நன்னயவிபூதி யணிந்தேத்தி-வணிகர்-பூச
நடக்குமுறைபேசி முருகேசனடி போற்றி (தன)

21. சொன்னமுறைப்படியாவு மழைத்து-பெரியோர்-இந்த
தொல்லுலகச் சாமான்கடன்னை வரவழைத்து
மின்னணி சேர்பொற் றேர்முன் சென்று-வணிகர்-பூட்டி
விந்தையுட னலங்கரிக்கக் கொண்டுவந்து நின்று (தன)

22. செம்பவளத்தாற் றூண்கணாட்டி -தேரிற்-நாளுந்
திகழுமரகத வயிரவுத்தரங்கள் பூட்டி
பொன்பலகை தனையணியாய் சேர்த்து-நடுவிற்-மேலே
பொற்சரிகைப் பட்டுடனே ரத்னமணிகோர்த்து. (தன)

23. மேல்விட்டந்தனிற் சரிகைமாலை-தங்க-சுற்றி
விரைமிகு நந்தியாவர்த்த மலர்மாலை
நாற்புறமும்புகழுடனின்ருட-மேலே-திகழு
நளிர்மதிகளொத்த பலநவமணிக ளாட. (தன)

24. நாகரத்னக்கலசம்நாட்டி-மேலே-இந்த
நான்குதிசை கிடுகிடென வாடுமணிபூட்டி
மேகமின்போற் சிகரமின்ன-பார்க்க-மேலே
மிக்கவிலை பெற்றதனிக் கவிகையொளி துன்ன. (தன)

25. திடமான பஞ்சகதிகாட்டி-ஆகா-தாவிச்
செல்கின்ற சதுர்வேதப் புரவியது பூட்டி
நடமாடுங் காந்தருவராட-ஆகா-மேலே
நாற்புறமு மசைந்தாடுமாலைக ணின்ருட. (தன)

26. சந்திரர்கட் சூரியர்கட் போற்ற-பார்த்து-தேவர்
தவமுனிவ ரிந்திரருங் கண்டுபணிந் தேத்த
சுந்திரமா யலங்கரித்தார் பாரும்-தேரை-கந்த
சுவாமிவரும் விந்தைகளைச் சொல்கிறேன்வாரும். (தன)

27. ஆறறையின் மேல்விட்டிற் சென்ருர்-வணிகர்-அங்கு
ஆறுமுக நாதனுட சன்னதியி னின்ருர்
பார்நிறையும் படிஜனங்கள் கூடி-இந்த-மிகுந்த
பக்தியொடுபிரகாரஞ் சுற்றியேபண்பாடி. (தன)

28. அறுமுகனுக் கபிஷேகஞ்செய்து-சிறப்பாய்-இந்த
அவனிவிலை பெற்ற பட்டாடைதனைக் கொய்து
திருமேனி தனிலெடுத்துச்சாற்றி-பட்டை-முல்லை
செய்யமா மலருடனே திரு நீறிட்டாற்றி. (தன)

29. மருபிச்சி யிருவாட்சி மாலை-கமழு-ரோஜா
மகிழமலரோடு கொடிமல்லிகைப் பூமாலை
திருவல்லி செண்பக மந்தாரம்-மலர்ந்த-ஆகா
சிவந்தி கொங்கரும்பினொடு திகழ்சந்திர ஹாரம். (தன)

30. உச்சியிற் கிரீடந்துலங்க-ஆகா-அடியர்
ருரைகேட்குங் காததனிற் குண்டலமிலங்க
பச்சைக் கல்லாபரணமாட-திகழும்-மார்பிற்
பவுன்மாலை கிண்கிணென்றே தாளம்போட. (தன)

31. முத்துவைடூரிய மிலங்க-அழகு-வச்ர
மோகனமாலைகளுடன் பொன்னாரந் துலங்க
பத்துவித மணிக்கோர்வையாட-ஆகா-ரத்னப்
பதக்கமுடன் சரப்பளிகள் பளபளவென் ருட. (தன)

32. திகழிடையி லரைஞாண் துலங்க-சரிகை-வயிரந்
திகழ் மகரகெண்டியுடனே கெவுடிலங்க
புகழ்கெவுரு சங்கமது துன்ன-ஆகா-மார்பிற்
பொங்கு நவரத்ன நகையெங்கு மொளிமின்ன. (தன)

33. செங்கைதனிற் றிருக்கொலுசு பூட்டி-திவ்ய-சோதி
திகழ்கடைய மொடுவிரலிற் கணையாழி மாட்டி
பொங்கு சிலம்பாட மறைதேட-எங்கும்-செய்ய
பொற்றுளிலே தண்டை புகழூட நின்ருட. (தன)

34. கதம்பமொடு கஸ்தூரிசேர்த்து-வீசுங்-புனுகு
கமழோடு கந்தத்திற் பன்னீரை வார்த்து
நிதம்பணியுந் திருத்தாளைப்போற்றி-வணிகர்-எங்கள்
நித்யவடிவேலாவென் றர்ச்சனைகட் சாற்றி. (தன)

35. தூபதீபங்க ளெடுத்தேத்தி-கோடி-தேவ
துந்துமிமுழங்க மலரடியில் மலர்தூற்றி
தேவதேவர்கள்பணிந்துபோற்ற-அங்கு-தபவு
செய்து பசுமந்தானுக் கெழுந்தருளென் றேத்த. (தன)

36. சீர்திகழு மேல்வீட்டில் நின்று-நல்ல-வேலர்
சிந்தையுடன் பசுமந்தான் போய்வர நன்றென்று
பார்புகழும் பொற்படி நின்றிழிந்து-இந்த-அடியார்
பட்சமுடன் போற்ற வருளன்பாய்ப் பொழிந்து. (தன)

37. சிங்காரத்தேர்மீது வந்தார்-முருகர்-அப்போ
சிறுவர்முத லனைவோர்க்குஞ் சிரஞ்சீவி தந்தார்
சங்காரனை முருகேசன்-சூர-சிம்மந்
தாங்குமாசனமீ தமர்ந்த குமரேசன். (தன)

38. பன்னிருபுயத்தழகன் வந்தான்-ஆகா-செம்பொற்
பவளவாயாறுடைய சண்முகனும் வந்தான்
மன்னுயிர்களுக்கிறைவன்வந்தான்-ஆகா-றெங்கோன்
மாநகரம் வாழும்வடி வேலனிதோ வந்தான். (தன)

39. வந்தார் வந்தாரென்று போற்ற-வேலர்-அடியார்
மனமது மகிழ்ந்து கொண்டாடியே வாழ்த்த
மந்தாரைமலர் வாரித்தூற்றி-கமழு-வெற்றி
வடிவேலன் ரதமீதெழுந்தருள வேற்றி. (தன)

40. இந்தவிதம்பணிந்து-புகழ்ந்தேற்ற-அடியார்-திங்க
ளிரவிசூழண்டத்து ளோர்கண் மகிழ்ந்தேத்த
கந்தமல ரெங்குமணநாறும்-கமழுங்-வணிகர்
காவடியெடுக்கும விளையாடல்களைப் பாரும். (தன)

41. பொற்பலகைதனையெடுத்துத் துளைத்து-நல்ல-சட்டம்
பூட்டியபொற் காவடியில் ரத்தினமிழைத்து
நற்பவளமணியணியாய்ப்பூட்டி-கோர்த்த-கையிலை
நாதனருள் பாலரிரு பேர்களையும் நாட்டி. (தன)

42. பத்தியுடனே விரதமிருந்து-வணிகர்-சத்தி
பாலனருட் பிரசாதமுட னீரருந்தி
முத்துவைரப் பணிகள்பூட்டி-வணிகர்-உலக
முழுதும் விலைபெற்ற மோதிரம் விரலில்மாட்டி (தன)

43. புனுகுசந்தன திலதமிட்டு-பன்னீர்-நீறு
பூசியேமுடிமீது பொற்சரிகை பட்டு
இனியகாதிற் கடுக்கன்பூட்டி-ஆகா-வெண்பட்
டிலங்குமிடைமீதி லரைஞாணதனைமாட்டி (தன)

44. சித்திரமாய்க்காவடிகட்கட்டி-ஆகா-பொங்குஞ்
சிகரமெனுஞ் செமபுகளிற் சக்கரையைக் கொட்டி
சுற்றிமணி கலகலவென்றாட-எங்குஞ்-மேலே
சோதிதிகழ் பன்னங்க மீதிலருளாட. (தன)

45. பொன்னாலாத்திக ளெடுத்துப்போற்றி-வணிகர்-கருணை
பொழியும் பன்னிருவிழியி னருள்கண்டு வாழ்த்தி
முன்னாளில் விடமுண்டோன் பாலா-ஆகா-வெற்றி
முருகா மான்மருகா வங்தெமையாளும் வேலா. (தன)

46. என்றுசிலர்போற்றி மலர்தூற்றி-வேலா-உந்த
னிருதாளே கதியென்று திருநீறு சாற்றி
நன்றுடைய காவடியைத்தூக்கி-வணிகர்-சாமி
நாதாவென்றேபாடி தோண்மீது தாக்கி. (தன)

47. தீவட்டி பகல்வத்திசூழ-மிகுந்த-அடியார்
சிங்காரவேலர் மலரடியில் முடிதாழ
தாய்விட்ட மதலைபோற்றேடி-பெற்ற-தேவ
சண்முகனிருக்கும் ரதத்தருகில் வந்துகூடி (தன)

48. வேலவா வென்றுசிலர்பாட-வெற்றி-நாங்கள்
வேண்டும் வரந்தாவென்று காவடிகளாட
கோலமாமயிலிறகு ஜொலிக்க-வன்ன-பட்டு
குஞ்சங்களோடுமணி கொஞ்சியேயொலிக்க. (தன)

49. தனனதனவென்று சிலர்பாட-தனன-கந்த
சாமிகாவடிகட் கொண்டொயி லாட்டமாட
ஜெனனமரணப் பிணிகணீங்க-அடியார்-எங்குஞ்
ஜெயவிஜயவடி வேலனருட் பெருகி யோங்க. (தன)

50. கற்பூரதீபங்கள் கோடி-துலங்கும்-வணிகர்
கந்தாகடம்பாவென் றன்புடனே பாடி
பொற்பாத காணிக்கைபோட-வணிகர்-அடியார்
போற்றினேம் போற்றினேமென்று கவிபாட. (தன)

51. கொம்புதப்புகளுடனே மேளம்-ஆகா-எங்குங்
கோஷ்டிக்கவே நாகசுரமுடனே தாளம்
தம்புருடனே பிட்டில்பாட-வீணை-பரத
சங்கீதத்தோ டாறுமுகனைக் கொண்டாட. (தன)

52. பொன்னல வட்டங்கள்சூழ-எங்கும்-நல்ல
பூச்சக்ரக் குடைகளொடு புறம்வந்து சூழ
மின்னார் வெண்சாமரங்கள் போட-தேவ-வீணை
மிர்தங்க டால்விருது கட்டியம் பாட (தன)

53. பீடு சுருட்டிகள் பிடிக்க-எங்கும்-வணிகர்
பித்தர் மகனேயென்று பலவாற்படிக்க
ஈடொருவரில்லையெனப்பாட-எங்கும்-வணிக
ரிடும்பா கடம்பாவென்றேத்தி மகிழ்ந்தாட. (தன)

54 தங்கத்திறல் விசிறிவீச-மின்னுங்-தேவர்
சண்முகா சரஹணபவா வென்று பேச
செங்கைதனில் வேன்மகிழ்ந்து காட்ட-வேலர்-மிகுந்த
தீவட்டி மத்தாப்பினுலிருளை யோட்ட. (தன)

55. தேவதாஸ்திரீக ணடமாட-ஆகா-நான்கு
திசைமகிழும் பதினெட்டு வாத்தியம் பாட
பூவினுற்செய்திடும் பந்தெறிய-மலர்ந்த-அமரர்
புள்ளிமயில் வாகனுவென்று மலர்சொரிய. (தன)

56. வெண்முகச்சங்க மெடுத்தூத-எங்கும்-வேத
வேதியர்க ணீதிதவறுமல் மறையோத
சண்முகக் கடவுளொளிவீச-பால-வணிகர்
சந்தோஷமாய் முருகன்றன் னழகைப்பேச. (தன)

57. சாதி மிகுமலர் தாளில்விழுக-கமழும்-திவ்ய
சர்க்கரைக்காவடியிற் றேனமிர்த மொழுக
சோதிதிக ழாபரணந்துலங்க-எங்குஞ்-நல்ல
சொர்ண மயமாகிய தேர்ச் சேலைகளிலங்க (தன)

(2)

58. சூரசங்கார முருகையன்-ஆகா-அசுரர்
துணைவர் முடியடியோ டறுத்த ஜெகமெய்யன்
தேரதன்பொன்வடந் தொடுங்களென்றார்-வணிகர்-நல்ல
சீர்மிகுந்த காவடிகளாடிவந்து நின்றார் (தன)

59. ஒளிசூழ்ந்த தேரின் வடந்தொட்டார்-எங்கும்-அடியார்
உள்ளமகிழ்ந் தவரவர்கள் வல்வினையை விட்டார்
களிகூர்ந்து சாமரங்கட்போட-மனது-மற்ற
கவிராய ரரகராவென்று கவிபாட (தன)

60. வணிகர்வளர்வீடுகளிற் சென்றார்-செல்வ-வேலர்
வருகிறா ரென்றவர்க ளெதிர்கொண்டு நின்றார்
மணிகள் திகழ் தேரசைந்துவரவே-ரத்ன-வணிகர்
மனமகிழ்ந்து காணிக்கை வரிசையுடன் தரவே. (தன)

61. தாம்பூலமோடு பழந்தேங்காய்-வணிகர்-சூடந்
தன்னுடனே தாம்பாளந் தன்னில்வெகு பாங்காய்
தேன்பாகு சர்க்கரைக ளெடுத்தார்-இன்னம்-வேலர்
திருப்பூசைக்காய்வணிகர்மனைகடொறுங்கொடுத்தார் (தன)

62. வாங்கியதேங்காயதனை யுடைத்து-அய்யர்-கனியின்
வர்க்கமொடு பிரசாத மகிழ்வாய் படைத்து
பாங்குடனே திருநீறுகொடுத்தார்-மகிழ-வாங்கி
பழனிமலை வேலாவென் றணிந்து துயர்விடுத்தார். (தன)

63. பொற்றேரி லேறிவரும் பாலன்-திகழும்-ஈராற்
புயமுடையோனுன நம தாறுமுகவேலன்
கர்த்தாவுமாகிய குணாளன்-நமது-மாது
கனவள்ளி தெய்வானை யிருவர் மணவாளன். (தன)

64. அன்புமகிழ்ந் தர்ச்சனைகள் செய்தார்-மிகுந்த-அடியா
ரரகர சிவாயநமவென்று பணிந் துய்தார்
பொன்றிகழுந் தேரதனைநாடி-ஆகா-இப்போ
புறப்படுவோம் போய்வரவென் றனைவருடன் கூடி (தன)

65. வந்தமுறைப் பிரகாரமென்றார்-அவர்கள்-வணிகர்
வசித்திருக்கு மனைகளுக்கு வழக்கம்போற் சென்றார்
விங்லைதருந் தரிசனமுங் கொடுத்தார்-பார்க்க-தேரை
விறைவாகச்செலுத்தவே பிரயாணமெடுத்தார். (தன)

66. வாருங்களென்று சிலருரைக்க-மகிழ்ந்து-தேவர்
வாசனை மிகுந்தமலர் மகிழ்வுட னிரைக்க
பாருங்கள் தேர்வருகுதென்றார்-வந்து-வேலர்
பழய திருவிளையாட்டை சொல்லுங்களென்றார். (தன)

67. குமரர் திருவிளையாட்டைப் பாரும்-ஞான-நல்ல
குணமிகுந்த பாடற்களைக் கேட்பதற்கு வாரும்
அமரர்புகழ் தினைப்புனத்திற் சென்றார்-ஆகா-வள்ளி
ஆசையதனால் வேங்கைமர மாகிநின்றார். (தன)

68. கோலமயிலேறும் வடிவேலன்-வண்ண-வேணு
கோபாலன் மருகனாய் வந்தகுண சீலன்
ஞாலமிகுபன்னிருபொற் கையன்-ஆகா-எங்குஞ்
ஞான பண்டிதனான சண்முக முத்தையன். (தன)

69. தென்பழனிமலைவாழ் பொற்றாளன்-நாளுந்-மாது
தெய்வானை வள்ளியிரு மங்கைமண வாளன்
அன்பொழுக வருள்புரியுங் குமரன்-எவர்க்கும்-அண்ட
ரண்டர்க்கு மயனுக்கு மனைவர்க்கு மமரன். (தன)

70. ஐங்கரனுக்கிளையமுருகேசன்-தொந்தி-தேவ
ரகமகிழத் திருச்செந்தூர் நகர்வாழு மீசன்
சங்கரனுக்குப தேசமுரைத்தார்-தந்தை-தேவர்
சந்தோஷமாய் செம்பொன் மலர்வாரியிறைத்தார். (தன)

71. கங்கைதனை முடிமீதணிந்து-யீசன்-தில்லை
காளியுட னின்று வாதாடத் துணிந்து
செங்கைதனில் மழுமான் றரித்து-திவ்ய-குளிர்ந்த
திங்களையணிந்த செஞ்சடைதனைவிரித்து. (தன)

72. பொற்ருளிற் றண்டை சிலம்பாட-திகழும்-எங்கும்
பொங்குமரவாபரண நின்றுசொலித்தாட
சித்தாதி முனிவர் பதம்பாட-தேவர்-உமா
தேவி நடமாட மறைதேட வருளாட. (தன)

73. கரியமால் மத்தளம்போட-ஸ்ரீமத்-தங்க
கடையமுடன் மார்பிலணி நவமணிகளாட
புரிநடனங் கண்டமரர்பாட-ஈசர்-உயர்ந்த
பொர்பணிகளோடு புலித்தோலு மசைந்தாட. (தன)

74. மாலயன்பொற்றிருவடியைத் தேட-ஆகா-தில்லை
மன்றின் மாகாளியுட னின்று நடமாட
கோலநீறணிவன் மறைக்கையன்-திரு-உலகுக்
கொருவனுய் நின்ற சிவனருளுமுருகையன். (தன)

75. வருகிருர் வருகிருரென்ருர்-வேலர்-அடியார்
வாருங்கள் வந்துகலி தீருங்க ளென்ருர்
பெருகவள ரிந்நகரில் நாளும்-செல்வம்-கோடி
பிரகாசமுடைய ரதஞ்செல்லும் விதங்கேளும். (தன)

76. பொற்றேரின்கீழ்த் தங்கரேதை-ஆகா-வேலர்
போய்வருகும் வீதியிது புகழுடைய பாதை
கற்றவர்கள் கவிபாடச் சென்ருர்-வேதங்-வள்ளி
கணவனுடன் காவடிக ளாடிவருகின்ருர். (தன)

77. இந்நகரின் சிறப்புரைக்கப்போமோ-ஆகா-தேவ
இந்திரன்வாழ் நாடிதற்கு நிகராமோ
பொன்னகரின் புகழழகைப் பாரு-இந்த-வேலர்
புறப்படிவ திந்நகருக் கெங்குநிகர் கூறு. (தன)

78. வேத மறையோர் வசிக்கு மூரு-சைவர்-நமது
வேலர்வளர் தமிழ்நாட்டி லெத்தனையோ பாரு
நாதனருள் வேதமுதற் றந்தார்-சாமி-வேலர்
நமக்காகவேயிந்த நகர்மீது வந்தார். (தன)

79. தகதகவென்றே யொளிகணீட-எங்கும்-ஏகத்
தத்திமித்தோவென்று காவடிகளாட
ஜெகமுழுது மிவ்வோசை யாச்சே-இந்த-நமது
தேவனருளாற் பழைய தீவினைகட் போச்சே. (தன)

80. தேரின்வடஞ் சோராமற் பிடித்தார்-செம்பொன்-வணிகர்
சிறப்பாக பாதைகளிற் றருமங்கள் கொடுத்தார்
ஊரினலங்காரத்தை யுரைத்தார்-இந்த-வேலர்
உள்ளன்பினூற் றேவர்மலர் மாரியிரைத்தார். (தன)

81. வணிகர்வளர்முகல்ரேட்டைக்கடந்து-நாளும்-நல்ல
வரிசையுள்ள கடையணிசேர் வீதிதனில் நடந்து
மணிகள்திகழ் தேருடனேகூடி-எங்கும்-புள்ளி
மயிலேறும் வேலருடன் பசுமந்தான் நாடி. (தன)

82. தேரோடு காவடிகட் சூழ-முருகர்-வணிகர்
சிவசிவாவென்று மலரடியின் முடிதாழ
நீரோடு நதியதனைக் கடந்தார்-ஆகா-மேளம்
நெரிக்கின்ற மண்டபத்தி லனைவருட னடந்தார். (தன)

83. தேரதனை மட்மதிலே நிருத்தி-மலைபோல்-ரத்ன
சிங்கார ஊஞ்சற்றனில் வேலனை யிருத்தி
சீரதனைப்பார்த்துலகோர் மகிழ-வேலர்-அமரர்
ஜெயவிஜய சரவணபவாவென்று புகழ. (தன)

84. பொன்னுற்ற வூஞ்சற்றனிலாட்-வேலர்-வணிகர்
போற்றினேம் போற்றினேமென்று பதம்பாட
மின்னுற்ற தூபங்களேற்ற-பார்கக-தேவர்
மேலவாவென்றுமறை வினவியேபோற்ற, (தன)

85. காவடிகளொருபக்கமாட-இலக்ஷங்-வணிகர்
கட்டியஞ் சொல்லியே நின்று கவிபாட
சேவடியின் மீதுமுடி சாற்றி-முருகன்-வேலர்
திருக்கொலுவில்வீற்றிருக்கஜெயஜெயவென்றேத்தி.(தன)

86. பால்பெருகுங் காவடிகட் கோடி-திவ்ய-தேனின்
பாகுடையசர்க்கரைக் - காவடிகட்-கோடி
வேலுடைய காவடிகட்கோடி-வெள்ளி-வேலர்
வெற்றிமயி லிறகுடைய காவடிகட்கோடி. (தன)

87. வேடிக்கையாய்ச் சனங்கட்கூடி-எங்கும்-செம்பொன்
மேருவுக்கீடான பொற்றேரை நாடி
பாடிக்கொண் டடியார்கட் கூட-கவிகள்-மிகுந்த
பக்தியொடு காவடிக ளக்கினியிலாட. (தன)

88. அதிசயமிதென்று சிலர்கூற-மிக்க-வேல
ரடியார்ச் செய்பணி விடைகட் கானந்தமீற
மதிதிகழ்சே ராலயத்திற்சென்றார்-பரிதி-தீப
வகைசூழவலம் வந்து சந்நதியில் நின்றார். (தன)

89. சுற்றுமதில் ராசகோபுரஞ்சூழ்-உயர்ந்த-நடுவிற்
சொர்ணமயமான மணிமண்டபந் தனில்வாழ்
வெற்றிமுருகேசர்தனைத் தேடி-ஆகா-இந்த
மேதினியிலுள்ள வடியார்களொருகோடி. (தன)

90. செட்டிமாரொரு பக்கம்வந்தார்-அங்கு-மற்ற
தேசங்கடனில் வாசஞ் செய்பவரும் வந்தார்
மட்டிலாப்பல நாட்டில்வாழும்-இன்னம்-வேத
மறையவர்கள் பெரியோர்கள் வந்தவிதங் கேளும். (தன)

91. காணிக்கை கொண்டுசிலபேர்கள்-மிகுந்த-தேங்காய்
கற்பூரமோடு பழங்கொண்டு சிலபேர்கள்
மாணிக்கங்கொண்டு சிலர்வந்தார்-முத்து-வேலர்
மகிழவே காணிக்கைவரிசையுடன் தந்தார். (தன)

92. சோதிதிகழ் காவடிகளாட-எங்குஞ்-புகழ்
சொர்ணமயமாகிய சேவற்கொடிகளாட
பாதவருள்தந்த வொளிவீச-வேலர்-என்ன
பாருங்களென்று சிலர்பன்மறைகட்பேச. (தன)

93. காவடியின் சர்க்கரையை யெடுத்து-வணிகர்-வாழை
கனிகள்பல கனிகளுடன் தேனிறையவிடுத்து
தேவர்மகிழ் பஞ்சமிர்தஞ் செய்தார்-தேவ-முருகன்
சிறசிலபிஷேகஞ் செய்திட வமரருய்தார். (தன)

94. சரவணபவாவென்றுபாட-எங்கள்-நீதி
தழைக்கவே யளவற்ற காணிக்கை போட
அரவணியு மரன்றனைப்போற்றி-ஆகா-வேலர்
அளித்திடுந்திரு நீற்றை யன்புடனே சாத்தி. (தன)

95. சித்ரமுடன்ரத்ன நகை சாத்தி-திகழும்-கோவில்
சிந்தையுடன் வலமாய் வந்தெழுந்தருட்செய் நேற்றி
சுற்றியடியார்கள் புடைசூழ எங்குஞ்-சந்திர
சூரியர்களொடு தேவர்மலரடியைத் தாழ. (தன)

96. கண்டுமனமகிழ்ந்து விளையாட-இதனை-வேலர்
காக்ஷிதரு மறமுடைய திருமடத்தை நாட
பண்டுபல பிரசாதந்தந்தார்-வேலர்-அடியார்
பசிதீரவே யன்னதான மடம் வந்தார். (தன)

97. அன்னமலை வளருமிடஞ் சென்றார்.மடத்தில்-தேவர்
ஆதிசேஷன் புகழும் வெள்ளிமலை யென்றார்
என்னவிதம் வேலனருள் பாரும்-இங்கு-இன்ன
மிருக்கின்ற சிறப்புகளை யுரைக்கிறேன் வாரும். (தன)

98. குன்றைநகர் பழனிமலைதனிலும்-உலகில்-மற்ற
குன்றாலயங்கள்பல க்ஷேத்திரங்களிலும்
நன்குடைய தைபூசமென்று-மிகவும்-சிறப்பாய்
நடத்துவாரங்கங்கு நாதனருள்கொண்டு. (தன)

99. இந்நகரத் தைபூசந்தனைப்போல்-சிறப்பில்-உலகி
லீடிராதீசனரு ளெம்பிரா னருளால்
நன்னயமாய் நளபாகஞ்சமைத்து-கறிகள்-சாமி
நாதனுக் கற்புதமென் றன்பாயமைத்து. (தன)

100. அலைபோற் பல்வாத்தியமுழங்க-கடலின்-முரு
கையனுக்குப் பூசைசெய் தறம்விளங்க
மலைபோற் சமைப்பவகை யெல்லாம்-மடத்தில்-ஐந்து
வாரமடியாருண்ணும் வகைகேளும் நல்லாய். (தன)

101. பருப்புட னெய் சாம்பாருவார்த்தார்-திவ்ய-வாசம்
பரிமளிக்கும் ரசமுடனே பழவகைகட்சேர்த்தார்
விருப்பமுடன் பந்திகளிற்போட-வணிகர்-என்ன
வேணுமோகேளுங்களென்று கூத்தாட. (தன)

102. பழவகைகளுடன் சீனிலட்டு-மிகுந்த-திவ்ய
பாயசந்தனில் ருசிக்குந் தேனிறையவிட்டு
கனிதெளியு மப்பளமும் வடையும்-நல்ல-மிகுந்த
கற்கண்டு வதிரசமுந் தாம்பூல விடையும். (தன)

103. போடுபோடென்று சிலர்கூற-இன்னம்-அடியார்
பொசிக்கமுடியாமல் மனமானந்தமீற
நாடுசரவணப் பொய்கைசென்றார்-சிறந்த-சுத்த
நலஞ்செய்து தாம்பூலந்தனை வாங்கிநின்றார். (தன)

104 இந்தவித மைந்துநாள் நின்று-வணிகர்-பூசம்
இரவிசூ ழுலகோர் நடத்திவரல் நன்று
கந்தனரு ளாற்பூசம் நடக்க-ஆகா-கோவில்
கடந்துறெங்கோன் வருகும் பேரிகையடிக்க (தன)

105. விருப்பமுடன் றெங்கோனைத்தேடி-வணிகர்-வெற்றி
வேலர்வருந்தேருடனே யடியார்கட்கூடி
அருட்பெருகி மனமகிழ்ச்சி கூர்ந்தார்-வேலன்-வணிகர்
அனைவர்களும் றெங்கோன் மாநகர்வந்துசேர்ந்தார். (தன)

106. பகல்வர்த்தி மத்தாப்பிலங்க-தீபம்-கோடி
பரிதிமதி உதயாதிபோ லொளிதுலங்க
திகுதித்தென் றதிர்வாத்தியமுழங்க-ஆகா-செம்பொற்
றேர்வந்ததென் றுலகெல்லா மறம் விளங்க. (தன)

107. பூசஞ்செய் திருமுகவன்வந்தார் - சிறந்த-இந்த
பூவுலகத்தோர்கள் தினம்வாழ்கவருள் தந்தார்
தேசோமயமேல் வீட்டில்வந்தார்-திகழும்-ரத்ன
சிம்மாசனத்திலெழுந் தெங்குமருள்தந்தார். (தன)

108. சங்கரனு முமையவளும்வாழி-சம்போ-சச்சி
தானந்தமான மறைவாழி யறம்வாழி
ஐங்கரனும் வாழி யுலகெல்லாம்-ஆகா-திரு
வடியாலளந்த மால்வாழி மிகவாழி. (தன)

109. வேதமறையோர்கள் முதல்வாழி-நாளும்-வெற்றி
வேலாயுதக்கடவுள் வாழி மிகவாழி
நாதமிகு ஜெகமுழுதும்வாழி-ஆகா-றெங்கோன்
நக்கரத்தா ரெங்நாளும் வாழிமிகவாழி. (தன)

## காவடிச்சிந்து.

முற்றிற்று.

---

## தோத்திரக்கண்ணி.

சந்திரன்றன்னைச் சடைக்கணிந்தோனருள்சண்முகனே வேலா-
அருள்-தந்திடவே பசுமந்தா நகர்தனில் வந்தகுண சீலா. (1)

செங்கைவளையற்றனைச்சுமந்தே சத்தினை செய்வனஞ்சென்றவனே
வள்ளி-மங்கையினசைமயங்கியேவேங்கைமரமாகி நின்றவனே.

மண்டலத்தோர்கள் வணங்குந்திருச் செங்கண்மாலின் மருகோ
னே,புக-ழுண்டார்க்குமுத்தக்கணபதிநாதர்க்கடுத்தமுருகோனே.

வள்ளிதெய்வானையெனவடியார்தொழு மங்கைமணவாளா-உந்த
ன்-புள்ளிமயிற்றனிலேறியென்வல்வினைபோக்குந் திருத்தாளா.

வானவர்போற்றவந்தாறுஞ்சரவணவாறுமுகப்பொருளே
சொன்னதானந்தவமூளஞானியுளமுறுதத்துவமெய்ப்பொருளே

முத்துமரகதம் வைத்திழைத்த முடியுற்றிடுதண்டாயுதனே-உல
கெத்திசையும் புகழ்வெற்றியுடன் றிகழ்சத்தி வேலாயுதனே.

பொற்கரத்தின்கனிக்காகவுலகெலாம்போய்வலம்வந்தவனே
மாதுமைக்குழற்கங்கையணிந்தவன் றந்தைக்குமந்திரந்தந்தவனே

பார்க்கொருகோடி நூறாயிரஞ் சூரியர்போற்றும் பிரகாசா-பயந்
தீர்த்தடியார்களைக்காத்தருட்செய்திடுஞ்செந்திமுருகேசா.

நான்மறைபோற்றவசுரரோடுந்தம்நடத்தியதாண்டவனே
நல்ல-தேனிறைமாலையணிந்தகுகா துயர்தீர்த்தருளாண்டவனே.

கந்தாவுமையருள்மைந்தாவுன்றனருள் தந்தெனைக்காப்பாயே
எமை-யெந்தவிதமுமீடேறச்செய்தெங்களிடர்களைத்தீர்ப்பாயே.

ஸ்தோத்திரக் கண்ணி

முற்றிற்று.

## எச்சரிக்கை.

நாதாவினைதீதா யென்மேல்வாதா வருள்தாதா
வேதா பசுமந்தா நகர்வேலா யெச்சரிக்கை
உமைபாலா யெச்சரிக்கை. (1)

வானோர் பணிகோனே மறைத்தானே யருள்வோனே
தேனே பசுமந்தாநகர் தீரா யெச்சரிக்கை
அதிவீரா யெச்சரிக்கை. (2)

திருவேமழுத் தரித்தோனருட் செந்தாமறைப்பாதா
குருவே பசுமந்தாநகர் குகனே யெச்சரிக்கை
அறுமுகனே யெச்சரிக்கை. (3)

வனத்தே தினைப்புனத்தே வள்ளிதனைச்சேர்ந்தருட்செய்யு
மனத்தாய் பசுமந்தாநகர் வாசா யெச்சரிக்கை
முருகேசா யெச்சரிக்கை. (4)

உயர்கோபுர மதிற்சூழ் திருநகர்மேவிய துரையே
குயில்வாழ் பசுமந்தாநகர் குமரா யெச்சரிக்கை
புவிக்கமரா யெச்சரிக்கை. (5)

அமராதியர் துயர்போக்கிய வமராபதிக்கரசே
யெமையாள் பசுமந்தாநகர் யெந்தா யெச்சரிக்கை
மறைதந்தா யெச்சரிக்கை. (6)

குன்றுக்குடிநகர் மேவிய குழந்தாய் குமரேசா
நன்றாய் பசுமந்தாநகர் நாதா யெச்சரிக்கை
புகழ்போதா யெச்சரிக்கை. (7)

மதிசேர் சடையோனுக் குபதேச மருளியபொற்
கதிர்சேர் பசுமந்தாநகர் கந்தா யெச்சரிக்கை
உமைமைந்தா யெச்சரிக்கை. (8)

திகழ்சேர் தெய்வயானைக்கினியவனே சரவணனே
புகழ்சேர்பசுமந்தாநகர் பொருளே யெச்சரிக்கை
திருவருளே யெச்சரிக்கை. (9)

வாசமேவிய மாலைபூண் டிடுமாதியே பரஞ்சோதியே
மாசிலாப் பசுமந்தா நகர்வடிவே யெச்சரிக்கை
மறைமுடிவே யெச்சரிக்கை. (10)

எச்சரிக்கை-முற்றிற்று.

கீர்த்தனம்.

பல்லவி.

இராகம்-இந்துஸ்தானி-தாளம்-ஆதி.

சீர்புகழு மிரங்கோன் வணிகர்மேல் வீட்டில்வளர்
தேவனே முருகேசா. (சீர்)

அநுபல்லவி.

தார்புகழ் ஷண்முகனாகிய வேலா
சரஹணபவகுகனே யனுகூலா. (சீர்)

சரணம்.

பார்புகழ்ந்தேத்திட வவுணர்குலமறுத்த
பன்னிருகரத்தோனே எங்கும்
பச்சைமயின்மீதேறி ரக்ஷித்தருள்புரியும்
பங்கைய நிறத்தோனே. (சீர்)

தேவர்துயரகற்ற திருவவதாரஞ்செய்த
செய்யவிரு பொற்றாளா மதி
திகழும் நுதலுடைய வள்ளிதெய்வானையிரு
தேவியர்மணவாளா. (சீர்)

கரியைமுதலைராஜன் கடிந்துபிடிக்க வதைக்
காத்தமால் மருகோனே தேவ
கந்தாகடம்பா குகஞானபண்டிதா யெனைக்
காத்தருள் முருகோனே. (சீர்)

பேழைவயிர்படைத்த ஐங்கரன் செவிகிள்ளிப்
பெருமைப்படைத்தவீரா அருள்
பெருக்கிருபைசெய் தேகாம்பரங்கவிக்கருள்
பிரியமுடனே தாராய். (சீர்)

இராகம்-மாஞ்சை-ரூபகதாளம்.

பல்லவி.

சீர்திகழ் மாமயிலேறிய வேலா
தேவர்க்காய் விடமுண்ட சிவனருள்பாலா. (சீர்)

அநுபல்லவி.

பார்புகழ்ந்தேத்திடும் பன்னிருகையா
பசுமந்தான் மாநகர்பதி முருகையா. (சீர்)

சரணம்.

தசமுகன்றனை வென்றோன் றன்மருமகனே
சங்கரர்க்குபதேசஞ் சாற்றிய குகனே. (சீர்)

கனகவளையற்சுமந் தடவிசென்றவனே
கடியவசுரர் குலமுழுதும் வென்றவனே. (சீர்)

இந்திரர் வானவ ரிடுக்கந் தீர்த்தவனே
யிரவிசந்திரர் பணிந்தேத்திடுஞ் சிவனே. (சீர்)

தவமுனிவர்கள்தொழும் சண்முகநாதா
தருணமேகாம்பரந்தன் கவிக்கருள் தாதா. (சீர்)

தேவாரம்.

பார்வதிபாலகனாய் பாரோர் போற்ற............ப்
பன்னிருபொற் கரமுடையோ னீயேயானா......ய்
சீர்பதி சண்முகனானாய் செல்வனானா..............ய்
தேவ சேனாபதியாய்த் தேவனானா.....................ய்.
கூர்பதி வேலாயுதங் கைக்கொண்டோனா யெ...ன்
குறைதீர்த்துன்னருள்புரியுங் குமரனானா.........ய்
கார்பதியும் பசுமந்தா நகரின்மேவி...............க்
கருணையருட் கதிரேச னானாய் நீ ...............யே.

வாழி.

சீர்வாழி யறுமுகவன் சிந்தை கூறத்
திருவிளையாட் டாய்ச்சேர்ந்த சிந்து வாழி
பார்வாழி அரனயன் மால் மூவர்வாழி
பன்னிருபொற் கரம்வாழி பகைதீர்த்தாளுங்
கூர்வாழும் வேல்வாழி யமரர் வாழி
குழந்தைமுரு கேசர்தினம் வாழிவாழி
ஏர்வாழி வணிகர்குலம் வாழிப் பாரோ
ரிந்திரர் சந்திரரிரவி வாழிவாழி.

முற்றுப்பெற்றது.